**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், ஆடி மாதம் 25 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ம் நாள் திங்கள்கிழமை

**<u>இடைக்கால மனு எண். 9/2026</u>**

**in**

**<u>அசல் வழக்கு எண். 113/2024</u>**

அகத்தீஸ்வரன் ... **மனுதாரர்/வாதி**

//எதிர்//

1. சிவகாமி

2. வட்டாட்சியர், சூலூர் வட்டம்,
கோவை

3. நில வருவாய் ஆய்வாளர்,
வாரப்பட்டி கிராமம், சுல்தான்பேட்டை,
சூலூர், கோவை.

4. உதவி செயற்பொறியாளர்,
பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டம்,
சுல்தான்பேட்டை பிரிவு அலவலகம்,
சூலூர் வட்டம், கோவை. ... **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.சின்னசாமி, அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.சித்ரா,

அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் அரசுத் தரப்பு வழக்கறிஞர் திரு.S.S.விஜய்ஆனந்த், அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**உத்தரவு**</u>

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் 2 பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/வாதி தரப்பில் அரசாங்க அலுவலரான உதவி செயற்பொறியாளர், பரம்பிக்குளம், ஆழியாறு பாசனத்திட்டம், சுல்தான்பேட்டை பிரிவு அலுவலகம், சுல்தான்பேட்டை, சூலூர் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களை சாட்சியாக விசாரணை செய்ய அனுமதிக்குமாறும், சாட்சி தரப்பில் மனுதாரர்/வாதி தரப்பில் நீர்பாய்த்துக்கொள்ள உள்ள உரிமையை விளக்கும் ஆவணம் மற்றும் வரைபடம், வாதி சாட்சிக்கு அனுப்பிய மனு மற்றம் சாட்சி அளித்த பதில் ஆகியவற்றை தாக்கல் செய்ய அனுமதி கோரி மனு அளிக்க ஏற்பட்ட கால தாமதத்தை மன்னிக்க வேண்டியும், மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**</u>:

1.1). 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி பிஏபி வாய்க்காலை வெட்டி சட்டத்திற்கு புறம்பாக பைன் லைன் பதித்துள்ளார். அசல் வழக்கு செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் சொத்து விபரத்தில் உள்ள சொத்துக்களில் மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட காலை பூமிகளில் PAP அலுவலகத்தில் எந்தவித அனுமதியும் பெறாமல் சட்ட விரோதமாக PAP வாய்க்காலை அழித்து, PAP வாய்க்காலுக்கு கீழ் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி குடிநீர் பைப்லைன் அமைத்துள்ளார். அது குறித்து மனுதாரர்/வாதி கடந்த 26.09.2024 அன்று 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி அலுவலகத்திற்கு மனு அளித்திருந்தார். அது தொடர்பாக கடந்த 06.08.2025ம் தேதியன்று 4ம் எதிர்மனுதாரர்/ 4ம் பிரதிவாதி

மேற்படி பைப் லைனை நீக்கச்சொல்லி உத்தரவிட்டும், அதனை மதிக்காமலும் , நிறைவேற்றாமலும் இருந்து வருவது சம்மந்தமாக மனுதாரர்/வாதிக்கும், 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதிக்கும் பிஏபி பாசன உரிமை எவ்வாறு பாத்தியப்பட்டது எனவும், மனுதாரர்/வாதியால் அளிக்கப்பட்ட மனுவின் மீது எடுக்கப்பட்ட மேல்நடவடிக்கை குறித்தும் 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதியான பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டம் உதவி செயற்பொறியாளர் அவர்கள் சாட்சியம் அளிக்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. அவரது சாட்சியத்தின் மூலமே மேற்சொன்ன உண்மை தன்மைகளை வெளிக்கொணர முடியும் என்பதால் அவர் சாட்சியம் அளிப்பது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது.

1.2). கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், சுல்தான்பேட்டை, சுல்தான்பேட்டை பிரிவு அலுவலகம், பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டம், உதவி செயற்பொறியாளரான 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி அரசாங்க அலுவலராக இருப்பதால் அவரை மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சியாக விசாரிக்கும் பொருட்டு இந்நீதிமன்றம் தக்க அனுமதி அளிக்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. அவ்வாறு மனுதாரர்/வாதி தரப்பில் செயற்பொறியாளரை சாட்சியாக விசாரிக்க அனுமதி வழங்காவிட்டால் மனுதாரர்/வாதி பெருத்த கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாவார்.

1.3). ஆகவே மேற்படி வழக்கின் சொத்து விபரத்தில் உள்ள சொத்துக்களில் மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட காலை பூமிகளில் அமைந்துள்ள PAP வாய்க்காலில் PAP அலுவலகத்தில் எந்தவித அனுமதியும் பெறாமல் PAP வாய்க்காலை அழித்து PAP வாய்க்காலுக்கு கீழ் குடிநீர் பைப் லைனை எதிர்மனுதாரர்/பிரதிவாதி சட்ட விரோதமாக அமைத்துள்ளது பற்றி மனுதாரர்/வாதி கடந்த 26.09.2024ம் தேதியன்று 4ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு அனுப்பிய மனு தொடர்பாகவும், மனுதாரர்/வாதிக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் பிஏபி பாசக உரிமை

எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதனையும், மனுதாரர் தரப்பில் அளிக்கப்பட்ட மனுவின் மீதான மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டது குறித்தும் மனுதாரர் தரப்பில் 4ம் எதிர்மனுதாரரான பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டம், உதவி செயற்பொறியாளர் அவர்களை சாட்சியாக விசாரிக்க கோரி மனு தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து இம்மனுவினை ஏற்றுக் கொள்ள வேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**2). 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :-**

2.1). மேற்படி மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், பொருண்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் இந்த மனுவினை சுல்தான்பேட்டை, பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டத்தின் உதவி செயற்பொறியாளர் அவர்களை சாட்சியாக விசாரிக்க தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவில் விசாரிக்கப்பட வேண்டிய நபராக கூறி இருப்பவர், 4ம் பிரதிவாதியாக தரப்பினராக உள்ளார். அவரது சாட்சி விசாரணையின் போது அவர் தரப்பில் ஆவணங்கள் செய்து அவர் தரப்பில் குறியீடு செய்யாலாம். அதனால் மனுதாரர் வாதி தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும் வழக்கு தாக்கல் செய்து ஒரு வருடம் கழித்து இந்த பிரதிவாதிக்கு உதவி செயற்பொறியாளர் அனுப்பிய கடிதத்தினை இவ்வழக்கில் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது யாதெனில்? இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.**

4. மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள்

பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது செயலுறுத்துக் கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4.1). மனுதாரர்கள் தரப்பில், வழக்கின் சொத்து விபரத்தில் உள்ள சொத்துக்களில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு பாத்தியப்பட்ட காலை பூமிகளில் PAP அலுவலகத்தில் எந்தவித அனுமதியும் பெறாமல் சட்ட விரோதமாக PAP வாய்க்காலை அழித்து, PAP வாய்க்காலுக்கு கீழ் எதிர்மனுதாரர்/பிரதிவாதி குடிநீர் பைப்லைன் அமைத்துள்ளார். அது குறித்து பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டம் உதவி செயற்பொறியாளர் அவர்கள் சாட்சியம் அளிக்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது.

4.2). எதிர்மனுதாரர் தரப்பில், இம்மனுவில் விசாரிக்கப்பட வேண்டிய நபராக கூறி இருப்பவர், 4 ம் பிரதிவாதியாக தரப்பினராக உள்ளார். அவரது சாட்சி விசாரணையின் போது அவர் தரப்பில் ஆவணங்கள் செய்து அவர் தரப்பில் குறியீடு செய்யலாம். அதனால் மனுதாரர்/ வாதி தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை என ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

4.3). மனுதாரர் தரப்பில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு பாத்தியப்பட்ட காலை பூமிகளில் PAP அலுவலகத்தில் எந்தவித அனுமதியும் பெறாமல் சட்ட விரோதமாக PAP வாய்க்காலை அழித்து, PAP வாய்க்காலுக்கு கீழ் எதிர்மனுதாரர்/பிரதிவாதி குடிநீர் பைப்லைன் அமைத்துள்ளார் என சொல்லப்பட்டுள்ளது. இரு தரப்பினரும் தங்கள் வழக்கை தகுதியின் அடிப்படையில் நிரூபிப்பதற்காக, இந்நீதிமன்றத்தின் முன் தங்கள் தரப்பு வாய்மொழி மற்றும் ஆவணச் சான்றுகளை முன்வைக்க இந்த நீதிமன்றம் வாய்ப்பளிக்க வேண்டும். மேற்கூறிய வாதத்தின் அடிப்படையில், ஆவணங்களை ஆஜர்படுத்துமாறு அழைப்பாணை அனுப்புவதன் மூலம், வாதியின் வழக்கை நிரூபிக்க இந்நீதிமன்றம் மேலும் ஒரு வாய்ப்பை வழங்க விரும்புகிறது. எனவே, ஆவணங்களை ஆஜர்படுத்துவதற்காக உதவி செயற்பொறியாளர்,

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டம், சுல்தான்பேட்டை பிரிவு அலுவலகம், அவர்களுக்கு அழைப்பாணை அனுப்புவது அவசியம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SANTHOSHAM M
Digitally signed by SANTHOSHAM M
Date: [illegible]
18:56:15 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :- இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :- இல்லை

SANTHOSHAM M
Digitally signed by SANTHOSHAM M
Date: [illegible]
18:56:21 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Draft/Fair order
IA.No. 9/2026 in
O.S.No. 113/2024
Dated:.10.08.2026
DMC, Sulur.